DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
O.S.No.122/2015
******

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : சுப்புராஜ் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.03.2020 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் 2 ஆம் வாதி. எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணை உறுதி ஆவணம் எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 10.03.1943 ஆம் தேதியில் அய்யப்ப நாயக்கர் தாவா 11 முதல் 15 அயிட்டசொத்துக்களைப் பொறுத்து எல்லப்பநாயக்கர் வகையறாவின் மீது பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1. 02.08.1960 ஆம் தேதியில் சீனிவாசநாயக்கர், காசிநாயக்கருக்கு எழுதி வைத்த பதிவு உயில் ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.2. 02.12.1988 ஆம் தேதியில் வீராச்சாமி நாயக்கர், எங்களது தாயார் லட்சுமியம்மாளுக்கு பிறப்பித்துக் கொடுத்த நன்கொடை ஆவணம் பதிவு செய்யப்படாதது தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாதது என்பதாலும், மேற்படி ஆவணத்தைப் பொறுத்து செலுத்தப்பட்ட முத்திரைக் கட்டணம் சரியானதா, இல்லையா என்பதை விசாரித்து அறிய வேண்டியதிருப்பதாலும் தற்போது அந்த ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை. தாவா சொத்துக்களுக்குரிய பட்டாக்கள் 3 எண்ணம் வா.சா.ஆ.3 வரிசை.

காசிநாயக்கரின் இறப்பு சான்று வா.சா.ஆ.4. காசி நாயக்கரின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.5. கடந்த 11.10.1937 ஆம் தேதியில் சீனிவாசநாயக்கர் புல எண்.1473/2 நிலத்தை கிரையம் பெற்றதை காட்டக் கூடிய பதிவு கிரைய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.6. என்னுடைய அடையாளம் மற்றும் முகவரியைக் காட்டக் கூடிய ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.7. (வா.சா.ஆ.2 உயில் ஆவணம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது).

மேலும் ஆவணங்கள் தாக்கல் செய்ய கால அவகாசம் கோரப்பட்டதால் வழக்கு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்பட்டது.